100

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

# சதனபுரீசர்சதகம்.

இஃது

கைலாயகிரி பிரமபீடம் நிஜாநந்த யோகீந்திர

மாயிற்சூரிய—லம்பத்கிரி

அச்சுதாநந்த ஸ்வாமிகளநுக்கிரஹ மடைந்திலகும்

சதனபுரி

## ஸ்ரீராமசந்திரகுருஸ்வாமிகளால்

இயற்றப்பட்டு

அகூர்-மாணிக்க முதலியார்

திரவிய ஸஹாயத்தைக் கொண்டு

உப்புவேலூர்

திருமல கொண்ட தாஸரால்

திண்டிவனம்

ஸ்ரீ கிருஷ்ண விலாஸ அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

6-APR

Q22:417
N23.
128868



ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# சதனபுரீசர் சதகம்.

## காப்பு—வெண்பா.

மாவார் சதனபுரி மாதவன்மீ தோர்சதகம்
ஓவாத பேரன்பா லோதுதற்குப்—பாவாணர்
நித்தமுங்கொண் டாடு நிருமலனாஞ் சீராம
பத்தனனு மன்றாள்காப் பாம்.

## வேதியரியல்பு.

வேதசாத் திரங்க ளோர்ந்து விதிவிலக் குகளைத் தேர்ந்து
போதநன் கடைந்த னைத்தும் பூரணா நந்த மாகத்
தீதறக் கண்டோ ரேபூ தேவரா மற்றோர் தோன்றல்
சாதனீங் காதர் ராவார் சதனபு ரீச னாரே. 1.

## அரசரியல்பு.

அகமம தைகளில் லாரா யாந்தரப் பகையி னோடே
மிகுபுறப் பகையுஞ் செற்று மெலியுநல் லோரைக் காத்துச்
சுகமுறச் செங்கோ லோச்சுஞ் சுகுணபூ ஷணரே யன்றோ
சகமிசை யரச ராவார் சதனபு ரீச னாரே. 2.

## வைசியரியல்பு.

மிக்கநன் முதலைக் கொண்டு விவிதமாஞ் சரக்கைச் சேர்த்துப்
பக்குவ மாயா தாயம் படைத்ததன் பயனைத் தய்த்து
எக்கவ லையுமில் லாரா யேழையர்க் குதவுந் தூயோர்
தக்கவை சியரா வார்காண் சனதபு ரீசனரே. 3

## சூத்திரரியல்பு.

மாற்றுயர் தங்கம் போன்ற மனமுடை யவரா யாரும்
போற்றருந் தெய்வ பக்தி பூசுர பக்தி வாய்ந்தே
ஆற்றருங் கிருஷி யாலே யனைவரை யுங்காப் பாரே
சாற்றுசூத் திரரா மையா சதனபு ரீச னரே. 4

## கடவுளியல்பு.

அம்புவி தன்னிற் றீயை யக்கினி யனலென் றுற்போல்
நம்புநல் லடியா ரொவ்வோர் நாமமிட் டுனைய ழைப்பார்
வம்புறு முளத்தோ ரிந்த வகையறி யாரே லையோ
சம்புவு நீயும் வேறோ சதனபு ரீச னரே. 5

சிலரரி தனைப்பூ ஷிப்பர் சிவபிரான் றனைத்தூ ஷிப்பர்
இலகரி தனைத் தூஷிப்ப ரீசனைச் சிலர்பூ ஷிப்பர்
சொலற்கரு மிவர்தா மையோ சொப்பனத் தினுமெய் யோர்ந்து
சலனமற் றிருப்ப தென்றோ சதனபு ரீச னரே. 6

விண்டுவைச் சிவனை யெங்கே வேறுவே றாகக் கண்டார்
கண்டவர் கீழ்மே லென்னுங் கணக்கெத னாலே கொண்டார்
அண்டபிண் டங்க ளெல்லா மகண்டமா யமர்ந்தோ யுன்னைச்
சண்டையிட் டிழுத்தற் காமோ சதனபு ரீச னரே. 7

ஏத்துமி ராம நாமத் திலதும கார பால
நேத்திர பீஜ மென்று நிந்தித்தந் நாமஞ் சொல்லார்
சீர்த்திசேர் சக்ர வர்த்தித் திருமக னெனக்க ளிப்பார்
சாத்திர மெதுகற் றாரோ சதனபு ரீச னரே. 8

எத்தனை யுடுப்ப ணிந்தெங் கிருப்பினு மெல்லாந் தள்ளிச்
சுத்தமாந் தலைவன் றன்னைச் சுவானநன் கறிந்தின் பெய்தும்
உத்தம பத்த ரிவ்வா றெவ்வொரு மதத்தின் கண்ணும்
சத்தென லோன்றென் றேற்பார் சதனபு ரீச னரே. 9

## மதவாதியரியல்பு.

ஏகமாம் புமான வைக்கண் ணைத்தனை வேடம் பூண்டென்
மோசமுற் றவர்வெவ் வேறாய் மொழிவர்வே டங்க ணீக்கின்
வாகுறத் தெளிவா ரிந்த வண்ணநின் பாற்சந் தேகஞ்
சாகுநா ளளவுஞ் செய்வார் சதனபு ரீச னாரே. 10.

வடகலை தென்க லைக்கெவ் வகையிலும் பகைதீ ராமல்
புடவிற் படும்பா டிந்நாட் புதுமையன் றதுபோ தாமல்
மடமையாற் சைவ மாதி மதங்களை நிதந்தூ ஷிப்பார்
சடரெனப் படுவ ரன்றோ சதனபு ரீச னாரே 11.

பஞ்சஸம்ஸ் காரம் பெற்றோம் பாவபுண் ணியங்க ளற்றோம்
அஞ்சவேண் டுவதற் கஞ்சோ மனைத்தையுஞ் செய்வோ மென்று
கொஞ்சமும் பயமில் லாமல் குரங்குசேட் டைகளைச் செய்தாற்
சஞ்சலப் பிறவி போமோ சதனபு ரீச னாரே. 12.

பட்டைநா மமுமு டுத்த பஞ்சகச் சமும்புண் ணாகச்
சுட்டதோ ளுங்கை வல்யச் சுகந்தரு மேன்மெய்ஞ் ஞான
நிட்டையே னிதனைச் செய்ய நியமிக்குஞ் சுருதி யாதி
சட்டமே னென்றெண் ணாரே சதனபு ரீச னாரே. 13.

அமலமா மறிவைக் கல்லா ரருங்கதி யில்லா ரென்றே
தமதக மமதை நீத்துத் தத்துவ மடைந்தார் நல்லோர்
சுமையென விதைநீந் தெங்கோ சுயஞ்சுட ருளதாப் பொன்றும்
சமயிக ளலையா நிற்பார் சதனபு ரீச னாரே, 14.

கோத்திரங் குலமா சாரங் குறிகுண மறமெய்ஞ் ஞான
க்ஷேத்திரம் படைத்தா நந்த நிட்டையி னிலைத்தோ ரெந்தத்
தோத்திரம் புரிவா ரெத்தைத் தொழுதிடு வாரெ தற்காச்
சாத்திரம் படிப்பா ரையா சதனபு ரீச னாரே. 15.

படித்தவா றேந டக்கும் பான்மையோ ரிடத்திற் பொல்லா
நடத்தைமே வாதன் றோரே நற்குரு வருட்கா ளாகி
விடத்தைநேர் விடய வாஞ்சை வீடிவீ டடைவர் மற்றோர்
சடத்தைநே ரிழிஞ ரன்றோ சதனபு ரீச னாரே. 16.

மட்புர வியைக்கண் ணுற்றோர் மன்னுயிர்ப் புரவி தன்னைப்
பெட்புறக் கருதல் போலப் பிறங்குமூர்த் திகளைக் குங்கால்
கட்புல னுக்கெட் டாத கடவுளா முனையெண் ணாரோ
சட்சம யமுங்கொண் டாடுஞ் சதனபு ரீச னாரே. 17.

எரியு மடுவுங் காரு மெழிற்றடா கமுங்கா ணமல்
ஓரிபோற் கத்திக் கத்தி யொருகிணற் றுறுமண் டூகம்
வாரிதி மண்டூ கந்தை வைதது போற்பந் நூலுட்
சாரமோ ராதார் செய்கை சதனபு ரீச னாரே. 18.

வேதவே தாந்தஞ் சால விரிவதன் பொருளைக் கற்க
ஓதருந் தடைகண் மெத்த வுடலுறும் பிணிகண் மெத்த
காதல்செய் யாயுட் காலங் கணமிஃதை யுணர்ந்தான் மார்த்த
சாதகம் புரிவார் மேலோர் சதனபு ரீச னாரே. 19

வாதபித் தாதிக் காத்தன் வந்திரி முதலோ ராயுர்
வேதமோ தியவா றுள்ளின் வெம்மலா திகணீங் கற்காய்த்
தீதறு வேத நான்குந் தெரித்தரு ளினையே பின்னுஞ்
சாதன மினிவே றுண்டோ சதனபு ரீச னாரே. 20.

பல்லுயி ரையும்ப டைப்பாய் பாதுகாப் பாய்து டைப்பாய்
சொல்லுமுத் தொழிற்கு மூன்றாய்த் தோன்றுவா யன்றா யொன்
எல்லையற் றிருப்பா யென்னி லெவருனை யெளிதா யோர்ந்து [றாய்
சல்லிய மறுத்துய் வாரோ சதனபு ரீச னாரே. 21.

## அறிஞரியல்பு.

கற்றுங்கல் லாரைப் போலக் காண்பன வனைத்துஞ் சித்தாய்
வெற்றிட மில்லா தெங்கும் வியாபக மாய்த்து லங்கும்
பற்றிலா மெய்ஞ்ஞா னிக்கும் பரமனு முனக்கும் பேதஞ்
சற்றுமின் றவனே நீகாண் சதனபு ரீச னாரே. 22

பகலிர வறவெங் கெங்கும் பரப்பிர மமலாற் காணாப்
புகலரு மெய்ஞ்ஞா னிக்கும் பூதலத் தொவ்வோர் குற்றம்
இகலுறக் கற்பிப் பாரே லேனைய ரெங்கே தப்பிச்
சகதலத் திருப்பா ரையா சதனபு ரீச னாரே. 23.

தங்கத்தை யெவரே னும்பித் தளையெனிற் களிம்புண் டாகிப்
பங்கத்தைச் செயுமோ செய்யாப் பான்மையைப் போன்மே லோ
இங்கெத்தை யெவர்சொன் னாலு மிதயத்திற் சினமே வார்சற் [ரும்
சங்கத்தின் பயனார் தேர்வார் சதனபு ரீச னாரே. 24.

ஆதிமா மறைவல் லோரா யருந்தவம் புரிந்தெங் குந்தம்
சோதிஞா னத்தாற் பல்லோர் சுகம்பெறப் புரிந்த மத்வர்
கோதிலா பாஷ்ய காரர் குலவுஞ்சங் கரர்போ லின்றிச்
சாதியிற் சனிப்பா ராரே சதனபு ரீச னாரே. 25.

மாசறு ஜீவன் முத்தர் மதிமிகு பத்தர் சித்தர்
ஆசுர ருலகங் காக்கும் புரவல ருளதான் மண்மேற்
றேசுறு தெய்வம் பேணல் செறிமழை பொழிதல் பைங்கூழ்
சாசுவ தமதா யோங்கல் சதனபு ரீச னாரே. 26.

## மானிட வாழ்க்கையினியல்பு.

ஆகாத்துர்க் குணம்போ மட்டும் அடியரோ டணவு மட்டும்
தேகான்ம புத்தி நீத்துன் றிருவருள் பெருகு மட்டும்
வாகாயுன் றிருத் தொண்டாற்றி வழிபடு மட்டு நாயேன்
சாகாவா றருள் செய் யையா சதனபு ரீச னாரே. 27.

அமர்ந்துள வெறிய னெக்கா லத்தெழுந் தகலு வானோ
நிமிர்ந்த புன் னுனியி னீரெந் நேரங்கீழ் விழுமோ வவ்வா
றமிழ் மலஞ் செறிதே கத்தோ டுரைசெயா துயிர்தா னெந்தச்
சமயநீங் கிடுமோ சொல்லாய் சதனபு ரீச னாரே. 28

தந்தைதாய் தமயன் றம்பி தாரமக் களுக்கெக் காலும்
விந்தையா யுழைத்தென் னாவி வெளிப்படிற் பிணப்பே ரிட்டுச்
சிந்தை நொந் தருவ ருத்துத் தெருவின்கண் ணெறிவ ரென்றால்
சந்தத முறவா ரையா சதனபு ரீச னாரே. 29

அந்தோநேற் றிருந்தா னின்றைக் காவியைத் துறந்தான்பின்னே
வெந்தோர் கைப் பிடிநீ றானான் வீண்பிழைப் பிதெனப் பேசி
வந்தோர் தந்தமக்கவ் வாறே வருமெனக் கருதா தற்ப
சந்தோஷத் தாழ்வா ரேனோ சதனபு ரீச னாரே. 30.

கலியாணம் புரிவதற்குங் கான்முளை பெறுவ தற்கும்
நலியாமற் குடும்ப பாரம் நாடொறுஞ் சுமப்ப தற்கும்
வலியாவு மடங்குங் காறும் வாழ்ந்திட நினைப்பா ருன்றன்
சலியாப்பத் தியைச்செ லுத்தார் சதனபு ரீச னாரே. 31.

இனிமையாய்ப் படிக்கக்கேட்க வெழுதக்கீர்த் தனங்கள் பாடத்
தனியிருந் துனை நினைக்கத் தந்தைதாய்ப் பேணக் கல்லா
தனிசமு மலையும் பிள்ளை யணிற்பிள்ளை கீரிப் பிள்ளை
சனித்துஞ்சாப் பிள்ளைக் கீடாஞ் சதனபு ரீச னாரே. 32.

ஆணும்பெண் ணுஞ்சேர்ந் தங்கங் கலைவதுங் கலைவ லோருந்
தோணுமா றதமர் பாலில் துதிப்பது மதித்தற் கான
மாணுறு மறையோ ரீனர் மாட்டுழைப் பதுமை யோவிச்
சாணுத ரத்திற் கன்றோ சதனபு ரீச னாரே. 33

## வித்துவான்களியல்பு,

கற்றுநற் கேள்வி கேட்டுங் கலைவலோ ரெனப்பேர் பெற்றும்
பற்றுமை யத்தா லொன்றைப் பணிவுற வினவிற் போதும்
புற்றுளே பாம்பு போலப் புசுபுசென் றெழும்பிச் சீறிச்
சற்றுமங் கிருக்க வொட்டார் சதனபு ரீச னாரே. 34

சித்தசுத் திக்கு வேண்டுஞ் செயலேபூச் சியமாய்ச் செல்லப்
பித்தரெத் தனைபே ரோதம் பெயரொரு முழமாய் நீட்டி
சுத்தர்போ லபிந யித்துச் சொலும்பிர சங்க மெங்கே
சத்தமர் சவைக்கண் ணேற்குஞ் சதனபு ரீச னாரே. 35

நலியாமெய்ஞ் ஞானங் கற்று நானென லற்ற மேலோர்
வலியாதுங் காட்டா ரேனை வம்பர்செய் யுந்தம் பந்தான்
கலியாணப் பிள்ளை செய்யுங் காசியாத் திரைக்கீ டென்றே
சலியாமற் சாற்றற் காங்காண் சதனபு ரீச னாரே. 36

## அஞ்ஞானியரியல்பு.

கள்ளொடு கஞ்சா கோழிக் கறிவெறி கொண்டோர் செல்வம்
உள்ளவர் களையே தேடி யோடமா டெனுமெண் ணம்போய்க்
கொள்ளுங்கோ ணுனு மாற்றிற் குடாவடி களுமா வார்கள்
சள்ளையீ தெங்கு முண்டாஞ் சதனபு ரீச னாரே. 37

பூமியி லுருத்தி ராக்கப் பூனைபோ லெங்குஞ் சென்று
தாமிகு ஞானம் பேசித் தாடியுஞ் சடையுங் காட்டிப்
பாமர ரதிச யிக்கப் பலவித ஜாலஞ் செய்யுஞ்
சாமிகட் களவே யில்லை சதனபு ரீச னாரே, 38

குதிரைக்கீ ரிரண்டு காலோர் குட்டியோ டெட்டுக் காலே
இதிலுனக் கைய முண்டே லெண்ணிக்கொண் டெனைநம் பப்பா
மதிமயங் காதே யுன்றன் மனையினிற் றனமுண் டென்று
சதிசெயத் திரிவார் பல்லோர் சதனபு ரீச னாரே. 39

பகற்பொழு தினின்மேல் வேட்டி பறித்திடு வார்கூட் டஞ்சேர்ந்
தகந்தொறும் புகுவா ரஞ்சா தாவியுங் கொள்வா ரின்றேல்
புகலருஞ் சாமி வேடம் போடுவா ரிவாற் றாயோர்
சகலரு மகநோ வார்காண் சதனபு ரீச னாரே. 40

பக்குவ மாயெல் லோர்க்கும் பருப்பிலே நெய்விட் டாற்போல்
சக்குணங் களும்போ திப்பா ரிவரதை யியற்றிக் காட்டார்
இக்குண நமன்வே டத்தா னிரவெலா மெவர்க்குஞ் சொல்லும்
சற்குணம் போல்வ தன்றே சதனபு ரீச னாரே. 41

## சீடரியல்பு.

முகமொரு வகையாய்க் கோட்டி மோகமற் றவர்போற் காட்டி
திகழனுக் கிரக மீட்டித் தினமதை மனனஞ் செய்யாப்
பகையினாற் குருவுக் கேற்ற பங்கநா மங்கள் தீட்டிச்
சகந்தனி லலைவார் பல்லோர் சதனபு ரீச னாரே. 42

கற்கவேண் டியதைக் கற்றுங் கட்குடி புலைநீங் காமல்
கற்குரு வனுக்குப் பங்க நாமமிட் டெப்போ தும்போல்
பொற்கு மண்ணுக்கு நாரி போகத்திற் கும்பா ழாவார்
சற்கதிக் கென்று மழைப்பார் சதனபு ரீச னாரே. 43

நாலையின் மருவுஞ் சிப்பி நன்மழைத் துளியுள் வாங்கி
கருக்கொடு விலையின் முத்தங் களைப்பெறுங் கணக்கே போல
குருவரு ளடைவோ ரிந்தக் கொள்கையின் மவுனங் காத்தாற்
சருவமுஞ் சித்தி யாமே சதனபு ரீச னாரே. 44

பகருங்கட் குடிய னுக்குப் பயமில்லை நாண மில்லை
இகபர சுகங்க ளில்லை யெள்ளள விரக்க மில்லை
நகைதரு மவன்றன் சேட்டை நல்லவர் மதிப்ப தில்லை
சகதலத் திதுபொய் யன்றே சதனபு ரீச னாரே 45

## கட்குடியரியல்பு.

தந்தைதாய் மைந்த ராதித் தமரெலாம் பழித்துக் கூற
மொங்கைமொங் கையதாக் கள்ளை மூக்களவாக்கு டித்து
விந்தையாஞ் சேட்டை செய்யும் வெறிப்பிணங் களைச்சூழ்ந்
[தெல்லாஞ்
சந்தைபோற் சேர்வா ரையா சதனபு ரீச னாரே. 46

## மாமிசபக்ஷணிகளினியல்பு.

இம்சாதி யிழிவாஞ் செய்கை யிகந்தக மமதை நீத்துக்
சம்சாரி யாமுன் பாதங் கருத்திலெக் காலுஞ் சேர்த்து
வம்சாசா ரந்த வாத வாய்மைசேர் தூய்மை யோரைச்
சம்சாரப் பேயென் செய்யும் சதனபு ரீச னாரே. 47

பையிலே வைத்தெப் போதும் படிப்பது கொலைம றுத்தல்
கையிலே வளர்ப்ப தாட்டுக் கடாவுங்கோ ழியும வற்றை
நெய்யிலே சமைத்துத் தின்ன நினைவிலே வைத்துக் கொள்வார்
சையிவ ரெவரிற் சேர்வார் சதனபு ரீச னாரே. 48

கொடியவல் லியம்போற் கொன்றுங் கொன்றதைத் தின்று மூய்
வடிவினன் மனித ராக வந்தவ ரேனுந் தந்தங் [வார்
கடியசெய் கையினாற் காணிற் சர்ன்மிரு கங்க ளன்றோ
சடமச டங்கட் கெட்டாச் சதனபு ரீச னாரே. 49

மாமிச முண்பா ருண்டே வாழுவ மெனச்சா திப்பார்
தாமிள மையின்ம லத்தைத் தகப்புசித் தவரெக் காலும்
ஆமபிர் தம்போ லுண்ணு தகற்றிய தெதனா லிந்தச்
சாமிய மெவர்போ திப்பார் சதனபு ரீச னாரே. 50

உடலினுக் குடலைச் சேர்த்த லுறுதியென் றுரைப்பார் தங்கள்
குடலுறு மலத்திற் கந்தக் கொடுமலஞ் சேர்த்தற் கேனோ
தடைபுரி வாரிப் பாழுங் தருமசாத் திரந்தா னெந்தச்
சடமதி யாற்கற் றாரோ சதனபு ரீச னாரே. 51

வழக்கமா யுணும்பு லாலை வம்பர்சொன் னம்பி வாளா
விழக்கநேர்ந் திடின்வி யாதிக் கிரையதா யிறப்போ மென்பார்
கிழக்குமேற் கறியாக் காலங் கிழிந்தகோ வணமுங் கட்டாச்
சழக்குமோர் வழக்கந் தானே சதனபு ரீச னாரே. 52

ஈனர்தம் மகத்திற் ருக மேற்றுணு மவனைக் கெட்டுப்
போனவ னெனத்தூ ஷிப்பார் புலையர்தம் மலம்பு சித்த
ஏனங்குக் குடங்க ளைக்கொன் றின்புறத் தின்ப தேனே
சானகி மகிழுந் தூய சதனபு ரீச னாரே. 53

ஊருகா யாதிகட்குள் ளொருசிறு புழுவைக் கண்டால்
தேருமப் பாண்டத் தோடே தெருக்கடை யுடைப்பார் காய்ந்து
நேருமா மிசமச் சங்க ணிறைபுழு வுறினுங் கொன்று
சாருமன் பொடுபு சிப்பார் சதனபு ரீச னாரே. 54

புலையரைப் பரிசிக் குங்காற் புனலிடை மூழ்கித் தீட்டைத்
தொலைத்திடு வாரன் னோரின் றுன்மல முணுமெம் மூனைப்
பலருநன் களுந்த லென்ன பான்மைமேன் மையெனுக் கோழி
சலித்துக்கூ கூவென் றேங்குஞ் சதனபு ரீச னாரே. 55

தினம்புலா லானுர்க் கிட்டுத் திண்ணனு ரருள்பெற் றாரே
யெனிற்பெரு வெள்ளத் தாலோ ரேரியின் மடைதி றந்தாங்
கனையதே மதகா மோபே ரன்பினர் தம்போன் மற்றைச்
சனங்களுஞ் சரித்தற் காமோ சதனபு ரீச னாரே. 56

## காமிகளியல்பு.

காலணு வினுக்குத் தேங்காய் கற்பூரம் சாம்பி ராணி
ஏலந்தாம் பூலங் கொண்டுன் னிணையடி பணிய மாட்டார்
ஆலம்போற் கொல்லும் கூத்திக் காயிரம் பொன்னானாலும்
சாலவும் பணிந்தீ வார்காண் சதனபு ரீச னாரே. 57

பத்தினி தனியே வீட்டிற் பாதவித் திடப்பல் லோரும்
நத்திய தாசி வீட்டு நாயெனக் காத்துக் காத்து
நித்திய மவளைச் சேரு நீசரைக் கொளுத்தி னாலுஞ்
சத்திய சௌசம் பாரார் சதனபு ரீச னாரே. 58

மதியிலாக் கூத்திக் கள்ளன் மனைவியை நம்ப மாட்டான்
கதிபெறக் கருத மாட்டான் கடவுளைப் பணிய மாட்டான்
விதிவிதி யென்றங் கத்தில் விழலனாய்த் தனக்குத் தானே
சதிசெயும் பதித னாவான் சதனபு ரீச னாரே. 59

முகத்திலே மீசை யில்லா முண்டைக ளெல்லாந் தாசி
சுகத்திலே மோக்ஷ மென்று சுத்தரைத் தமைப்போற் கொண்டு
அகத்திலே பயமில் லாம லலைந்திடுங் கொடியோ ரிந்தச்
சகத்திலேன் பிறந்தா ரையா சதனபு ரீச னாரே. 60

முண்டைக ளிடத்தில் வைத்த மோகத்தான் மூட ரெங்கும்
மண்டைக ளுடைந்துந் தோளு மார்பும்புண் படக்கி டந்தும்
அண்டையிற் சேரற் காகா வரியகோ யாலி றந்துஞ்
சண்டனூ ரடைவா ரேனோ சதனபு ரீச னாரே. 61

அன்னியர் பொருளுக் காசித் தலையுந்தா சிகளைத் தெய்வந்
தன்னினு முயர்வா யெண்ணித் தனகன காதி யாவும்
பின்னிடை யாமற் றந்து பிரியமாய்ச் செயுஞ்சன் மானம்
சன்னியா சிகட்கே தையா சதனபு ரீச னாரே. 62

உரலினுக் காடை சாத்தி யொப்பனை செயினும் பெண்ணென்
றருகடைந் தணையும் பேயர்க் காயிர முறைசெய் தென்னும்
திருவென மனைவாய்த் தென்னுந் தெய்வங்கூத் தியெனத் தேடிச்
சருவமு மவட்கிந் தோய்வார் சதனபு ரீச னாரே. 63

இனியொரு தாய்வ யிற்றி லிழிமலப் புழுப்போற் றேக
நனியெடுப் பவரே மற்றை நாரியை விரும்பா நிற்பர்
எனிலரி யரியெந்நாளு மிதனையே சதமாக் கொண்டோர்
சன்னமெத் தனையாங் கொல்லோ சதனபு ரீச னாரே. 64

மங்கைய ரெழிலைக் கண்டு மயலுறு தவரின் றேனும்
அங்கமெங் குந்தங் கம்போ லவாவுத லகற்றித் தோலும்
தங்குமென் புஞ்செந் நீருந் தசைமல சலமுஞ் சார்ந்த
சங்கமென் றறிவார் மேலோர் சதனபு ரீச னாரே. 65

## உலோபியரியல்பு.

விமலஞா னியரை நாடார் வேசியி னேசம் வீடார்
தமருட னுண்ணத் தாளார் தந்தைதாய் மொழியுங் கேளார்
அமருநல் லறத்துக் கீயார் அருளிலா விந்தத் தீயார்
சமனனுக் கென்ன சொல்வார் சதனபு ரீச னாரே. 66

தர்சமுந் தீரா ரன்னந் தந்தரும் பசியும் போக்கார்
காகமா யினுந்தா முண்ட கையினு லோட்டா ருள்ளம்
நோகநல் லோர்மேற் குற்ற நுவலுவர் பிறந்த போதே
சாகவு மாட்டா ரேனோ சதனபு ரீச னாரே. 67

பெண்டுபிள் ளைகளுந் தீண்டாப் பேழையுந் திறவு கோலுந்
தெண்டனிட் டாலுந் தாராத் திரவிய முந்தங் கற்காய்
அண்டினோர்க் குதவா வீடு மாடுமா டுகளு மெல்லாஞ்
சண்டன்வந் திடிலார்க் காமோ சதனபு ரீச னாரே. 68

உந்தியுநனை யாக்கூழை யுப்பிலா தனுப விப்பார்
கந்தையை யுடுப்பார் சேர்த்த காசெலாங் கடத்திற் பெய்து
விந்தையாய்ப் புதைப்பார் வீட்டில் விளக்கையு மேற்று ரின்னோர்
சந்தைநா யனையா ரன்றோ சதனபு ரீச னாரே. 69

தாகத்திற் கென்று லூரிற் றடாகமே யிலையோ வென்பார்
ஆகத்திற் பசியென் றுலீ தன்னசத் திரமோ வென்பார்
எசத்தாம் பூல மென்று லெழுந்திரு கடைக்கென் பாரிச்
சாகசி களுஞ்சா வாரோ சதனபு ரீச னாரே. 70

அள்ளியிட் டறியான் றன்னை யருந்தனந் தருந்தா தாவென்
றுள்ளியொன் றனையா சித்த லூரகமு நுழைபாக் காட்டிற்
கொள்ளிவாய்ப் பேயின் பின்போய்க் குறிப்பற நெருப்பைக்
[கேட்கும்
சள்ளைபோன் றிருக்குங் கண்டாய் சதனபு ரீச னாரே. 71

திரணமாய்க் கருதிக் காலாற் றியங்குமா றுதைப்பா ருக்கும்
மரணமாம் படிகோல் கொண்டு மண்டையை யுடைப்பாருக்கும்
முரணறக் காசுந் தூசு முடுகித்தந் திடுவா ரில்லார்
சரணஞ்செய் தாலுந் தாரார் சதனபு ரீச னாரே. 72

அரிதாயா றேமுக் காலு மறையுங்கா லுஞ்சே ருங்கால்
பெரிதாமா பத்தென் பார்தம் பிறப்பைப்போற் பிறருக் கெய்
பரிதாபம் பார்த்தொன் றீயார் பட்டினி யெனினுஞ் சீறிச் [தும்
சரிதானப் பாற்போ வென்பார் சதனபு ரீச னாரே. 73

தருமத்தைக் கொல்லுந் தீயோர் தம்மையத் தருமங் கொல்லும்
தருமத்தைப் பெரிதுங் காப்பார் தம்மையத் தருமங் காக்கும்
மருமத்தைப் யறியா மாந்தர் மறலிவந் தழைக்கும் போதும்
சருமத்தின் மயிருந் தாரார் சதனபு ரீச னாரே. 74

தனங்குண மிரண்டு முள்ளார் தருபுரு டார்த்த முள்ளார்
மனஞ்செலு நெறியே செல்வார் மாட்டுள தனந்தா னந்தோ
புனந்தனிற் பூதங் காத்த புதையலாய்ப் போவ தல்லால்
சனங்களுக் குதவுங் கொல்லோ சதனபு ரீச னாரே. 75

மரணமொவ் வொருகாற் றுன்ப மதத்தினுன் மன்னு யிர்க்குத்
திரணமாத் திரமே னுஞ்செய் தீவினை பலகாற் றுன்பம்
தரனிச மெனத்தேர்ந் தோரெத் ததியினு மிதமே செய்துன்
சரணபங் கயத்தைச் சார்வார் சதனபு ரீச னாரே. 76

நீதமில் லாருங் கன்னேர் நெஞ்சரும் வஞ்சர் தாமும்
பாதக மிகுதி யாகிப் பகரும்புண் ணியம்பா ழாகிப்
போதலாற் கால மாரி பொய்த்ததென் றஞ்சா தோதும்
சாதக மிகநன் றன்றோ சதனபு ரீச னாரே. 77

சுகத்தினை விரும்பாச் சீவர் சொல்லிடி னெங்கு மில்லை
அகத்தினுற் பாபந் தேடு மவரதைப் பெறுவ தில்லை
நிகழ்த்துதற் கரிதா கும்புண் ணியஞ்சுகந் தருவ தென்றே
சகத்தினி லறிவார் நல்லோர் சதனபு ரீச னாரே. 78

## கோபியரியல்பு.

மூங்கிலிற் பிறந்த செந்தீ மூங்கின்முற் றுங்கெ டுக்கும்
தாங்கருஞ் சினத்தீ யுள்ளிற் றலையெடுத் திடுங்கா லாங்கே
பாங்கருள் ளவர்வெ றுத்துப் பதைத்திடப் புரிந்தப் பாலுஞ்
சாங்கல கஞ்செய் யுங்காண் சதனபு ரீச னாரே. 79

வெகுளியே யுயிர்க்கெ லாந்தீ வினைதனை விளைத்து ளத்தை
மிகுமெழின் முகத்தை நாணு விகாரமே விடச்செய் தீற்றில்
சுகமுறு வகைய கோரத் துன்பவா ரிதியி லாழ்த்தும்
சகமிசை யெவரீ தோர்வார் சதனபு ரீச னாரே. 80

## உலகத்தினியல்பு.

சித்திர வீட்டைக் கட்டிச் சிறப்புற வாழ்வோர் போவார்
புத்திர ரெனவந் தோரும் போவார்பௌத் திரரும் போவார்
இத்திற மிருந்தெல் லோரு மேகுவ தாலெவ் வீடுஞ்
சத்திர மெனலாம் போலுஞ் சதனபு ரீச னாரே. 81

## சத்தியத்தினியல்பு.

அனகனுந் தரும ராச னமரிலோர் பொய்யைக் கூறி
கனிகொடு காலன் பாலி னரகினைக் கண்டா னென்றால்
தினமுமா யிரம்பொய் சொல்லுந் தீயர்க்குக் கதிதா னேதோ
சனகனு தியர்கொண் டாடுஞ் சதனபு ரீச னாரே. 82

## பணப்பேயரியல்பு.

வட்டிக்கோர் வட்டி வாங்கி வறியர்நெஞ் செரியச் செய்து
மட்டிக்கம் மட்டின் பேனு மரணமாந் தருணந் தன்னைக்
கட்டிக்கொண் டழப்பால் குத்தக் கால்வழி யில்லா தெங்குஞ்
சட்டிச்சோ றேற்றுண் பார்கண் சதனபு ரீச னாரே. 83

## சூதாடுவோரியல்பு.

பன்னிரண் டாறே ழெட்டு பலேக்ளவர் பார்த்து வெட்டு
பின்னிரண் டிஸ்பேட் ஜாக்கி பேஷ்வெரி வெல்டை மண்டைகை
முன்னிறங் கெனவீண் கால மூடரா யொழிப்பா ருன்றன்
சந்நிதி யிலுஞ்சேர் வார்காண் சதனபு ரீச னாரே. 84

## பேதைமையினியல்பு.

பெரியர்கீ ழமர்ந்தி ருப்பப் பேதையா தனத்தின் மேவிப்
பரிவுற லரிமா தங்கம் பல்லுகங் கவய மாதி
மிருகசா லங்கீ ழெய்த மேவருந் தருவின் மந்தி
சரித்துப்பல் லிளித்தற் கொப்பாஞ் சதனபு ரீச னாரே. 85

பாத்திர மறிந்தீ வோர்க்குப் பயனலாற் றுயர்செய் வெய்யோர்
காத்திர வேடங் காட்டக் காசுத வுதன்மீன் வேட்டுக்
கோத்திடுந் தூண்டின் முள்ளைக் கொள்பவர்க் குதவல் போலாஞ்
சாத்திர நெறியீ தன்றே சதனபு ரீச னாரே. 86

கோத்திர முண்டே யெங்கள் குலமுண்டே குடும்ப முண்டே
சூத்திர முண்டே யெல்லாஞ் சுத்தமுண் டேயென் றேனு
மூத்திரக் குழியால் வந்த முறைமறந் திழிந்தோ ரெல்லாஞ்
சாத்திரம் பிதற்றிச் சாவார் சதனபு ரீச னாரே. 87

கஞ்சியில் வடிப்போ ரெல்லாங் கனதன வான்க ளானார்
நெஞ்சிலொன் றுதட்டி லொன்றாய் நிரப்புவோர் சிறப்போ ரானார்
தஞ்சமென் றறம்பா லிப்போர் தரித்திர ரானா ரந்தோ
சஞ்சித மிதுதான் போலுஞ் சதனபு ரீச னாரே. 88

பாரதப் போரெப் போதும் பண்ணுவோர் சகவா சத்தைத்
தாரமன் பாரச் செய்யுந் தலையணை யுபதே சத்தை
நேரலாச் சிறியார் பாலி னேசத்தை நெடுங்கா சத்தைச்
சாரவொட் டாரே தீரர் சதனபு ரீச னாரே. 89

பிள்ளைநோய் பெருநோய் பொல்லாப் பித்தநோய் மத்தர்க்கெய்தும்
வெள்ளைநோய் விழிநோய் கைகால் வீங்குநோய் தாங்கற் காகாக்
கொள்ளைநோ யௌட தத்தாற் குணப்படுங் குடும்பந் தோறுஞ்
சள்ளைநோய்க் கெதையுங் காணோம் சதனபு ரீச னாரே. 90

பள்ளியிற் படித்தற் கஞ்சும் பாலக ருபாத்தி யாயன்
றுள்ளிவீழ்ந் திறக்கத் தெய்வந் தொழுதிடுந் தூர்க்கு ணம்போல்
கள்ளியா மனையா ளுந்தன் கணவனைக் கொல்லற் கெண்ணிச்
சள்ளென விழுவா ளையா சதனபு ரீச னாரே. 91

தமராரே னுஞ்சா குங்காற் றைரியம் விடாதீ ரென்பார்
நமதுயிர் திரமா வென்பார் நாமும்போ வாரே யென்பார்
இமையள வினிற்றம் பாலஃ தெய்திடி லழுவா ரெல்லாஞ்
சமமாய்க்காண் பாரா ரையா சதனபு ரீச னாரே. 92

டப்பென மனையா ளோதி னொருகுதி குதித்துக் கீழே
தொப்பென வீழ்ந்தேங் கும்பேர் தொல்லுல கெல்லா மாண்ட
செப்பரும் புகழ ரிச்சந் திரனளன் றுயரைக் கேட்கின்
சப்பெனத் திடங்கொள் ளாரோ சதனபு ரீச னாரே. 93

தந்தைதா யரைச்சு மந்த தனயன்றன் கடன்றீர்ந் தாற்போல்
விந்தையா யுரைக்கத் தாய்தான் விளம்பிய விவரங் கேட்கின்
மைந்தருக் கன்பீன் றார்மேன் மாறுமோ கூறுங் காலச்
சந்ததி செழித்தோங் குங்காண் சதனபு ரீச னாரே. 94

அற்பமாம் விவகா ரங்கட் கவையினிற் புகவொண் ணாது
சொற்பதட் டமுமோர் சார்பாச் சொல்லலுங் கேட்கொ ணாது
இற்புறக் கேட்டுஞ் சும்மா விருக்கொ ணா திருந்தா ராயின்
சற்புரு டருந்தீங் கேற்பார் சதனபு ரீச னாரே. 95

உத்தியிற் சிறந்துள் ளோருக் கொருதுறை யுஞ்சா ராமல்
எத்திசை யினுமேம் பாடே யெய்துத லரிதோ வேந்தன்
பத்தினி களுக்கா மாறு பகர்ந்தொரு சிரேட்டி தன்பாற்
சத்தியி னாலுய் யானோ சதனபு ரீச னாரே. 96

மோகத்தாற் பெண்கொள் வார்க்கு முந்திரா லைந்து காணி
போகப்பொற் கொலுசுங் காப்பும் புதுவையட் டிகையு மற்றும்
ஆகத்தா னாகுங் கல்வி யாணஞ்செய் தூணில் லாமல்
சாகத்தான் வேணும் போலுஞ் சதனபு ரீச னாரே. 97

கொள்ளைக்கொப் பாகப் பெண்ணைக் கொடுப்பவ ரிருப்பைக் கட்
பிள்ளைக்கேற் பதையுந் தம்மாப் பிள்ளைக்கே பெரிதுந் தந்து [டிப்
வெள்ளைக்கோட் பூட்சு தொப்பி விநியோகம் புரிவா ரிந்தச்
சள்ளைக்கென் றழிவுண் டாமோ சதனபு ரீச னாரே. 98

ஏற்றமுந் தாழ்வு மாக விருக்குங்கை விரல்க ளெல்லாந்
தோற்றமாம் படிசே ருங்காற் றொழில்பல பலவா மவ்வா
றாற்றலான் மிக்கோ ரேனு மருந்துணை யிருந்தா லன்றிச்
சாற்றருந் தொழிலா காதே சதனபு ரீச னாரே. 99

புகலுங்கற் புடையில் லாளும் புருடனு மொருமித் தன்பாய்த்
தகுமெரு துகளைப் போலத் தாங்கித்தர் மார்த்த காம
நிகழற்கா நெறிக்கண் ணீர்ப்பி னிலையாச்சம் சார மென்னுஞ்
சகடஞ்சென் றிதமாக் குங்காண் சதனபு ரீச னாரே. 100

முன்பதா யொன்றி ரண்டு மூன்றுநா லைந்தா றேழெட்
டொன்பதா யுறுமெண் ணோடே யொருமூப்பா னெண்ணைக் கூட
பின்பதா யுறுமெண் செய்யும் பெருந்துய ரறிந்த டக்கிற் [டப்
சன்மபா வனமா மையா சதனபு ரீச னாரே. 101

ஆற்றுநீர் பெருகும் போதங் கடையும்பண் டிகளைத் தன்மேல்
ஏற்றிச்சென் றப்பா லிப்பா லிறக்குநதெப் பந்தான் றப்பா
தாற்றின்கண் கிடக்கு மாப்போ லடியனே னடையா னாலும்
சாற்றுஞ்சொல் லிழிவா காதே சதனபு ரீச னாரே. 102

ஸ்ரீஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ந ஹநுமத்ஸமேத
ஸ்ரீராம சந்திர பரப்பிரம்ஹணே நம:
ஸ்ரீராமார்ப்பணம்.
சுபம்.

ஸ்ரீ

ஸ்ரீ ராமசந்திர ஸஹாயம்.

ஏலப்பாக்கம் எனப்பெயர் வழங்கும்

சதனாபுரி,

ஸ்ரீராமசந்திர குருஸ்வாமிகளாகிய

இந்நூலாசிரியரால் இயற்றப்பட்டு

## இனிவெளிவரும் நூல்கள்.

வேமன யோகீஸ்வரர் சரித்திரம்

அருணகிரிநாதர் சரித்திரம்

பத்ராசல-ராமதாஸர் சரித்திரம்

கபீர்தாஸர் சரித்திரம்

கோராகும்பார் சரித்திரம்

ஜடபரதர் சரித்திரம்

வல்லாளராஜன் சரித்திரம்

வந்தியம்மையார் சரித்திரம்

குங்கிலியக் கலயனார் சரித்திரம்

## நாடகங்கள்.

பத்ராசல-ராமதாஸர் நாடகம்

குமண நாடகம்

கபீர் தாஸர் நாடகம்

கோரா கும்பார் நாடகம்

ஸ்ரீராம சந்திர குருஸ்வாமிகள் திவ்ய திருவடிகளே சரணம்,

சுபம்.